நூலக நன்கொடையாளர் ஆவணங்களை ஆவணப்படுத்தல்
ஆண்டறிக்கை **2020/2021**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | நூலக நன்கொடையாளர் ஆவணங்களை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0014 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட்  2020 - டிசம்பர் 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | யாழ்ப்பாண நூலகம், யாழ்ப்பல்கலைக்கழக நூலகம், நூல்க நிறுவனம், பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |

நூலக நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்தின் ஓர் பகுதியாக புலம்பெயர் சமூகங்களிலுள்ள நன்கொடையாளர்களால் வழங்கப்படும் ஆவணங்களை ஆவணப்படுத்தலாக இச்செயற்றிட்டம் முன்மொழியப்பட்டது.
இதன் அடிப்படையில் புலம்பெயர் சமூகங்களில் இருந்து வெளிவருகின்ற நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பத்மநாப ஐயர் மற்றும் நூலக செயற்பாடுகளை அறிந்த தன்னார்வலர்கள் போன்றோரால் நூலக நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவற்றை ஆவணப்படுத்தும் நோக்கில் இச் செயற்றிட்டம் முன்வைக்கப்பட்டு புலம்பெயர் சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் அடையாளப்படுத்தல்களை குறைத்து மதிப்பிட முடியாதது. அச்சமூகங்களிலிருந்து பல்வேறு ஆவணங்கள் வெளியிடப்படுகின்றன. அவ் வெளியிடுகள் ஈழத்தமிழர் சார்ந்த விடயங்களை உள்ளடக்கங்களாகவும் கொண்டவை. இவ்வாறான பல அரிய ஆவணங்கள் எண்ணிமப்படுத்தலை நோக்காகக் கொண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.
ஆயினும் தொடர்ச்சியாக இதன் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. கொவிட் காரணமாகவும் பணியாளர்கள் இன்மையினாலும் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து போதுமான அடைவுகளும் எட்டப்படவில்லை.

இச்செயற்றிட்டம் ஊடாக 2020 / 2021 களில் இடம்பெற்ற செயற்பாடுகள்

புலம்பெயர் சமூகத்தின் பண்பாட்டுப் பரப்புக்களிலிருந்து பல்வேறு ஆவணங்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் வெளிவருகின்றன அவை  பற்றிய பட்டியல் ஒன்றினைத் தயாரிக்கப்பட்டது.

ஏற்கனவே சேகரிப்பில் உள்ள ஆவணங்களை பட்டியலிடப்பட்டு அவற்றுள் அரிய ஆவணங்களை முதன்மைப்படுத்தி எண்ணிமப்படுத்துவதற்கான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன.

அடைவுகள் **2020**

| | மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆகஸ்ட் | 217 | 4648 |
| 2 | செப்டம்பர் | 83 | 9734 |
| 3 | ஒக்டோபர் | 18 | 5476 |
| 4 | நவம்பர் | 68 | 10996 |
| 5 | டிசம்பர் | 67 | 14580 |
| | மொத்தம் | **453** | **45434** |

அடைவுகள் **2021**

| | | | |
|---|---|---|---|
| | ஜனவரி | செயற்பாடுகள் இடம்பெறவில்லை | |
| | பெப்ரவரி | செயற்பாடுகள் இடம்பெறவில்லை | |
| | மார்ச் | செயற்பாடுகள் இடம்பெறவில்லை | |
| | ஏப்ரல் | 18 | 2403 |
| | மே | செயற்பாடுகள் இடம்பெறவில்லை | |
| | யூன் | செயற்பாடுகள் இடம்பெறவில்லை | |
| | யூலை | 56 | 5676 |
| | ஆகஸ்ட் | 26 | 3976 |

| | | | |
|---|---|---|---|
| | செப்டம்பர் | செயற்பாடுகள் இடம்பெறவில்லை | |
| | ஒக்டோபர் | 11 | 1866 |
| | நவம்பர் | 14 | 7666 |
| | டிசம்பர் | செயற்பாடுகள் இடம்பெறவில்லை | |
| | மொத்தம் | **125** | **21587** |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சாவலான காரணியாக அமைந்தது.
- நூலக நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்கள் எண்ணிக்கையைக் கொண்டு குறிப்பிட்ட அளவு ஆவணங்களையே எண்ணிமப்படுத்த முடிந்தது அதனால் மேலதிக ஆவணங்கள் அலுவலகத்தில் தேங்கியுள்ளதோடு தேங்கியுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் மேலும் அதிகரித்துள்ளது.
- பணியாளர்கள் விடுப்பு, பணிவிலகல், புதிய பணியாளர் பயிற்சிகள், அவர்கள் கருவிகளை, உபகரணங்களை வினைத்திறனோடு கையாள்வதில்.ஏற்பட்ட சிக்கல்கள். எண்ணிமப்படுத்தல் தாமதப்படுத்தியமை.
- எண்ணிமமாக்கும் கருவிகளைத் தொடர்ந்து இற்றைப்படுத்துவதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு இருக்கவில்லை.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- எண்ணிமப்படுத்துவதற்கான ஊழியர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.
- பொருத்தமான கருவி உபகரணங்களைப் போதிய அளவில் கொள்வனவு செய்யப் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட வேண்டும். மின்வருடல் கருவிகளை பரிந்துரைத்தல்.
- ஊழியர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- ஆவணச் சேகரிப்பிலும் எண்ணிமப்படுத்துவதிலும் எத்தகைய ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்கான திட்டமிடல்கள் அவசியம்